# உங்கள் கடந்தகாலம் உங்கள் எதிர்காலத்தைக் குறித்து கூறும்போது!



இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

நாளை என்ன நடக்கும் என்பதைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று எப்போதாவது நினைத்ததுண்டா? கவலைக்கிடமான இன்றைய உலகில், ஏறத்தாழ அனைவருமே எதிர்காலத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். இதனால், வரப்போவதைக் குறித்து ஆயத்தமாக இருக்கலாம் என்றும் நினைக்கிறார்கள். பங்கு சந்தையில் முதலீடு செய்பவர்கள் சட்டத்திற்கு விரோதமாகப் பங்கு எந்த அளவிற்கு உயரும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக கோடிக்கணக்கில் செலவு செய்கிறார்கள். தங்களுடைய போட்டியாளர்கள் பெரிய போட்டிகளில் எவ்வாறு விளையாடுகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க விளையாட்டு அணிகள் சாரணர்களை அனுப்புகின்றன. எனினும், அவர்கள் சேகரிக்கும் தகவல்கள் வலிமையானவைகள் அல்ல என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதின்மேல் உங்கள் வாழ்க்கைக்கான நம்பிக்கையை உங்களால் வைக்கமுடியாது!

ஆனால், வேதத்திலுள்ள இரண்டு புத்தகங்களான தானியேலும் வெளிப்படுத்தின விசேஷமும் எதிர்காலத்தைக் குறித்து துல்லியமாகக் கணிப்பதில் அற்புதமானப் பதிவுகளை வைத்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதாயிருந்தாலும், அவற்றின் பக்கங்கள் நாளை என்ன கொண்டுவரும் என்பதைக் குறித்த ஆச்சரியமான விரிவான நுண்ணறிவைக் கொண்டுள்ளன.

தானியேலின் புத்தகத்தில், உலகத்தின் வல்லமையான தேசத்தின் அரண்மனையில் ராஜாவுக்கு மிக அருகில் அமரும்படியான இருக்கையை அந்தப் பழைய எற்பாட்டுத் தீர்க்கதரிசி பெற்றிருந்தார்; வெளிப்படுத்தலில், மத்தியத்தரைக்கடலின் ஒரு தீவின்மேல் உள்ள சிறைச்சாலையில் அமர்ந்து இயேசுவின்

அப்போஸ்தலனான ஒருவர் எழுதினார். இருவருக்குமே இணையதள வசதியேதும் இல்லை. ஆனாலும், அதற்கும் மேலான ஒன்றை அவர்கள் பெற்றிருந்தனர்: அது அண்டசராசரத்தின் தேவனுடனான நேரடித் தொடர்பாகும். துல்லியமாக, எதிர்காலம் என்ன கொண்டுவரவிருக்கிறது என்பதை அவர் அவர்கள் இருவருக்கும் கூறினார்! இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் வால்ஸ்டிரீட் அல்லது ரேஸ்ட்ராக்கில் உங்களைப் பணக்காரன் ஆக்கிவிடாது, ஆனால் மிகவும் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் இவ்வுலக வாழ்க்கையைக் கடந்துசெல்ல இவை உதவும்.

இங்கே உள்ள மற்றொன்றைக் குறித்தும் நீங்கள் அறியவேண்டும்: தானியேலும் வெளிப்படுத்தலும் சகோதரர்களைப்போல; அவை எழுதப்பட்ட காலங்கள் வெவ்வேறு நூற்றாண்டுகளாயிருப்பினும், அவை இரண்டிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. உண்மையைச் சொல்லப்போனால், தானியேலின் மறைபொருள்களை வெளிப்படுத்தும் திறவுகோல்தான் வெளிப்படுத்தல் ஆகும். அதேப்போல், வெளிப்படுத்தலை தானியேல் இல்லாமல் புரிந்துகொள்ளமுடியாது. இரண்டுமே பரலோக மற்றும் பூலோக நிகழ்வுகளைக் குறித்தும், அவை எவ்வாறு முடிவுகால சம்பவங்களுக்குக் கொண்டு செல்கின்றன என்பதைக் குறித்தும் பேசுகின்றன. இரண்டு புத்தகங்களுமே வித்தியாசமாகக் காட்சியளிக்கும் மிருகங்களைக் குறித்து ஒரே விதமாகப் பேசுகின்றன. ஆரம்பத்தில் அவைகளின் வெளிப்படுத்தப்பட்ட அடையாளங்கள் புரிந்துகொள்வதற்கு கடினமாக இருந்தாலும், அந்த இரண்டு புத்தகங்களையும் ஒன்றுசேர்ந்து வேலைசெய்ய அனுமதித்தால் மற்றவர்களைக் காட்டிலும் உங்களால் எதிர்காலத்தைக் குறித்து சிறந்தமுறையில் அறிந்துகொள்ளமுடியும் என்பதை நீங்கள் கண்டறிவீர்கள்!

*இந்த இரு அற்புதமான புத்தகங்களான தானியேல் மற்றும் வெளிப்படுத்தலை சிறிது ஆழமாகப் படிப்போம்.*

## 1 எதிர்கால ராஜ்யங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியைக் குறித்து தானியேல் முன்னுரைத்தார் - அவர் அதைச் சரியாகக் கூறியிருந்தார்!

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில், உடைபடாத சங்கிலியைப் போலிருக்கும் பூலோக ராஜ்யங்களை எவ்வாறு உலகின் விஸ்தாரமானப் பகுதிகளைத் தன் வல்லமைக்குக் கீழ்ப்படுத்தும் என்பதை தேவன் தானியேலுக்கு வெளிப்படுத்தினார் - எனினும் அவை பிற்பாடு விழும் என்றும் கூறினார். பாபிலோனிய ராஜாவான நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்டது ஒரு பெரிய ராட்சத சிலையாயிருப்பினும், எதிர்காலத்தைக் குறித்த ஓர் அற்புதமான விளக்கமான புகைப்படத்தை தானியேல் வெளிப்படுத்தினார். அந்தச் சிலையானது தங்கம், வெள்ளி, வெண்கலம், இரும்பு மற்றும் களிமண்ணால் ஆனதாகும். மேலும், அவ்வுலோகங்கள் ஐரோப்பாவின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியை வெளிப்படுத்தின. அவையாவன, பாபிலோன் (தங்கம்), மேதியா பெர்சியா (வெள்ளி), கிரேக்கம் (வெண்கலம்), ரோம் (இரும்பு), நவீனகால ஐரோப்பா (களிமண்) ஆகும். தானியேல் புத்தகத்தில் உள்ள இந்த தீர்க்கதரிசனங்கள் அவை நடப்பதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்னுரைக்கப்பட்டிருப்பதை சரித்திரம் சான்று பகருகிறது. ஆவை நிஜமாகவே நடந்தன. அப்படியென்றால், நீங்கள் தேவனுடைய புத்தகத்தை நிச்சயமாக நம்பமுடியும்!

ஆச்சரியம் என்னவென்றால், ரோமின் வீழ்ச்சியிலிருந்து உருவாகும் ஒரு வல்லமையைக் குறித்தும், அது எவ்வாறு உலகத்தை ஆளுகை செய்யும் என்பதையும் தானியேலும்

வெளிப்படுத்தலும் விவரிக்கின்றன.

## 2 முழு உலகத்தையும் தன் செல்வாக்குக்குட்படுத்தும் ஓர் ஆன்மீக வல்லமையைக் குறித்து தானியேலும் யோவானும் வெளிப்படுத்துகிறார்கள்.

தானியேல் 7ம் அதிகாரம் "சின்னக் கொம்பை" அறிமுகம் செய்கிறது. இதுவே, ரோமின் வீழ்ச்சிக்குப் பிறகு எழும்பும் வல்லமையாகும். மேலும், இது அரசியல் சக்தியின்மூலம் உலகமுழுவதிலும் ஆன்மீக ஆசரிப்பைக் கட்டுப்படுத்த வகைதேடும்; அது பூமியில் தேவனுடைய இடத்தை தன்னுடையதாக உரிமைக்கோரும். சின்னக்கொம்பு "உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கும்" (வசனம் 25) என்று நாம் அறிந்திருக்கிறோம்.

வெளிப்படுத்தல் 13, இதே வல்லமையை, "சமுத்திரத்திலிருந்து எழும்பும் மிருகம்" (வசனம் 1) என்றழைக்கிறது. இவை இரண்டுமே ஒன்றுதான் என்பதை நாம் அறிவோம், ஏனெனில் இவை இரண்டிற்குமே ஒரே விதமான குணாதிசயங்கள் உள்ளன: "அது தேவனைத் தூஷிக்கும்படி தன்வாயைத் திறந்து... பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும் படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது" (வசனங்கள் 6, 7).

இன்று இந்த வல்லமைதான் உலகத்தில் தன்னுடைய வல்லமையைப் பிரயோகித்துக்கொண்டிருக்கிறது என்றும், மேலும் அதனுடன் கோடிக்கணக்கானோர் இணைந்துவிட்டனர் என்றும், வெகு சீக்கிரத்தில், கடைசிக் காலத்தில் தங்கள் விசுவாசத்தை மறுதலித்து சமுத்திர மிருகத்தோடு இணையவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு

உண்மையான கிறிஸ்தவர்கள் தொடர்ச்சியான அழுத்தத்திற்குள்ளாகப்போகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

## 3 இயேசுவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கும் அண்டசராசரத்தின் யுத்தம் குறித்து தானியேலும் வெளிப்படுத்தலும் வெளிப்படுத்துகின்றன.

பூமி உண்டாவதற்கு முன்னமே, பரலோகத்தில் யுத்தம் உண்டாயிற்று. தேவனுக்கு விரோதமாக, நன்மைக்கும் தீமைக்கும் இடையே ஒரு மாபெரும் போராட்டத்தை உருவாக்கி சாத்தானும் மூன்றிலொரு பங்கு தூதர்களும் கலகம் செய்தனர். இதே யுத்தம் இறுதியில் நமது பூமியில் அர்மெகதோனில் உச்சநிலையை அடையும்.

தானியேல் 8ம் அதிகாரம் இந்தப் பிரபஞ்சத்தின் போராட்டம் குறித்து விரிவாக விளக்குகிறது, அதாவது தெய்வீக வல்லமையினால் சின்னக்கொம்பு இறுதியில் அழிக்கப்படும் என்று கூறுகிறது. தானியேல் 9, ஆச்சரியமூட்டும் விதத்தில், சின்னக்கொம்பை அழிக்கப்போகும் கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்து விரிவாகப் பேசுகிறது.

வெளிப்படுத்தல் 12, 13, 20 மற்றும் 21 அதிகாரங்கள் தீமை, பாவம் மற்றும் மரணம் ஆகியவை நமது பூமியிலிருந்து முற்றிலும் அழிக்கப்படவிருப்பதை வருணிக்கும் யுத்தங்களைக் குறித்து விரிவாகப் பேசுகின்றன. உலக ராஜ்யங்களை அடையாளப்படுத்தின சிலையை மோதி அதை அழிக்கக்கூடிய கல்லை "கையால் பெயர்க்கப்படாத" கல் (தானியேல் 2:34) என்று தானியேல் வெளிப்படுத்தினார். தேவனுடைய ராஜ்யத்தை அடையாளப்படுத்தும் இந்தக் கல், "பெரிய பர்வதமாகி பூமியை நிரப்பிற்று" (வசனம் 35). அதாவது அவருடைய ராஜ்யமே என்றென்றைக்கும் நிலைநிற்கும் என்பதே அதின் அர்த்தம்!

## 4 ஆவிக்குரிய போராட்டம் இயேசுவின் வருகைக்கு வழியை ஏற்படுத்தும்

தானியேல் 8ல் காணப்படும் நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான போராட்டமானது சீக்கிரமே ஒரு முடிவிற்கு வரும். இதைக் குறித்த சம்பவங்கள் வெளிப்படுத்தலில் அதிகாரங்கள் 12-14 வரை விவரிக்கப்பட்டுள்ளன. தேவன் இன்னும் தமது கிருபையால் தக்கவைத்துள்ள உலகத்தின்மீது சாத்தான் தனது மூர்க்கமான கோபத்தை ஊற்றுவான். மனுக்குலம் அனைத்தும், மீட்கப்பட்டவர்களும் மீட்கப்படாதவர்களும், இந்தப் போராட்டத்தை அநுபவிப்பார்கள். இந்த சம்பவங்கள் கொடுமையானதாகவும் துன்பம் நிறைந்ததாகவும் இருக்கும் - பெரும் அச்சம், யுத்தம், மரணம் மற்றும் அழிவு போன்ற பெரும்பாலானவை திடீரென்றும் எதிர்பாராமலும் தாக்கும்.

ஆனால், "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துகொள்ளுகிறவர்கள்" (வெளி. 14:12) ஜெயங்கொண்டவர்களாக எழும்புவார்கள். தேவன் தம்முடைய ஜனத்தை மறக்கமாட்டார். வெளி. 22:7ல், இயேசு, "இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று வாக்குரைத்திருக்கிறார். தம்முடைய ஜனத்தை மீட்கவும் புதியதொரு நித்தியமான பரலோகத்தை ஸ்தாபிக்கவும் அவர் வருவார்.

நண்பரே! நாளைய தினத்தின் தலைப்புச் செய்திகளை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இதனால் இனிவரப்போகும் சம்பவங்களுக்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கலாம். உங்கள் இருதயம் தேவனுடன் சரியான விதத்தில் சீராக இருக்கிறதா என்று சரிபார்க்கும் நேரம் இதுவே – அப்பொழுது அவர் மீண்டும் உங்களுக்காக வருவார்!




## இன்னும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

வேதத்திலுள்ள வேறெந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறியுள்ளன? அவை நிறைவேறுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னமே வேதம் எவ்வாறு அவைகளை முன்னுரைத்தது? 'குறித்த நேரத்தில் நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுத்தப்பட்டன!' என்ற வேதபாடத்தில் உங்களை ஆச்சர்யமூட்டும், உள்ளத்தை ஏவும் பதில்கள் உள்ளன! உங்களுக்கான இலவசப் பிரதியை Time18.AFTV.in-ல் இன்றே பதிவிறக்கம் செய்யவும்.

---

AMAZING FACTS India

AmazingFactsIndia.org
Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in